**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட தேறிய செலவினத்தை கணக்கீடு செய்யும் போது குறித்த செலவின விடயங்களுக்கு மிகை அறவீடு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 197,877,835 ஆன செலவு மீதிகள், நிதிச் செயலாற்றல் கூற்றில் வேறு பெறுவனவாக காண்பிக்கப்பட்ட காரணமாக வருமானம் அல்லாத பெறுவனவு மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது | வருமானம் அல்லாத பெறுவனவு சரியாக இனங் காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 2,386,595,021 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஆரம்ப மீதி ரூபா 2,428,280,700 ஆக இருந்தமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதியில் ரூபா 41,685,679 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டதுடன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கக் கணக்கில் ஆரம்ப மீதியும் அப்பெறுமானத்தினால் இணங்கவில்லை. | வேறுபாடு இனங் காணப்பட்டுள்ளதாகவும் தொற்று நிலைமை குறைவடைந்த பின்னர் திறைசேரியுடன் தொடர்புபட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் ஒப்பிடப்பட்டு சரியான மீதிகளை அடிப்படையாக கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 2,541,892,874 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சீட்டின் பிரகாரம் அத்திகதியில் மீதி ரூபா 2,594,098,708 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 52,205,834 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டதுடன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கக் கணக்கில் இறுதி மீதியும் அந்த அளவினால் இணங்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் ACA-6 ''நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில்'' 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா ரூபா 2,739,406,842 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் அம்மீதி ரூபா 2,541,892,874 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 197,513,967 வரையான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வில்லையெனவும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியான மீதிகளை அடிப்படையாக கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கட்டுநிதி சீராக்கக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் போது கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு சீராக்கம் செய்ய வேண்டிய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட தேறிய செலவினமான ரூபா 6,607,321,132 ஆக இருந்த போதும் மாவட்ட செயலகத்தினால் ரூபா 6,805,198,868 ஆன மொத்தச் செலவினத்தை கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறைபாடுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக | சரியான பெறுமதிகள் கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை பிரதேச செயலகத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரின் ஆண்டின் இறுதியில் உள்ள ரூபா 181,570 ஆன கடன் மீதி உறுப்பினர் கடன் பதிவேட்டில் இருந்து விடுபட்டிருந்தது. | தவறுதலாக இக்குறைபாடு இடம் பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடொன்று இடம் பெறாதவகையில் நடவடிக்கை எடுப்பதாக | உறுப்பினர் கடன் பதிவேட்டினை சரியாக பேணிச் செல்லப்பட வேண்டும். |

### 1.6.5 கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சீட்டின் (SA-21) பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் | எதிர்காலத்தில் குறைபாடுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு | திறைசேரி மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு சரியான |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 6,813,504,501 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் கட்டுநிதி சீராக்க கணக்கிற்குள் அம் மீதி ரூபா 6,805,198,968 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக செலவிடப்பட்ட செலவினத்தில் ரூபா 8,305,533 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மீதிகளை அடிப்படையாக கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்வு செய்யப்பட்டுள்ள ஆனால் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத ரூபா 7,424,361 தொகையான வழியில் கட்டுநிதி மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | தாமத தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யபடவில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது. | வழியில் காசு மீதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. | சேதங்கள் பதிவேடு தற்போது நாளது வரையாக்கப் பட்டுள்ளதாக. | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செலவின விடயமொன்றுக்கும் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 10,199,000 ஆன தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 9,282,094 மாத்திரம் பயன் படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்புக்கள் ரூபா 916,905 ஆக இருந்ததுடன் அச்சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து 7 சதவீதம் 29 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றமை, தொற்று நிலைமை பேரில் நிதிஏற்பாடு குறைவடைந்தமை, செலவின விடயங்களுக்கு மிகை அறவீடு மேற்கொள்ளல் போன்றவற்றினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடு சரியாக தயாரிப்பதற்கும் நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரி அச்சீடு குறிப்பு SA-92 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீதி ரூபா 2,272,050 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக் களில் (iv) ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் அம்மீதி ரூபா 884,518 ஆக இருந்தமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூபா 1,387,532 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | மேலும் பரீட்சிக்கப்பட்டு பதில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி மீதிகளுடன் ஒப்பிட்டு சரியான தகவல்களை நிதிக் கூற்றுக்களில் உள்ளக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் இலக்கம் (iv) குறிப்பின் கீழ் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில்'' தகவல்களை உள்ளடக்கும் போது நிதிப் பிரமாணம் 94(2) இன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய போதிலும் மேற்கொள்ளக் கூடிய மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் அத்தகவல்கள் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தகவல்கள் சமர்ப்பிக்கப் படுவதிலுள்ள குறைபாடுகள் ஏற்படாதவாறு எதிர்காலத்தில் செயற்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் சரியாகவும் முழுமையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை செயற்திறனாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்து மேலும் மேம்படுத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் – இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i xxiv ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | 2 வருடங்களுக்கும் 3 ஆண்டுகளுக்கும் முன்னர் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 371,133 கூட்டுத் தொகையான கடன் மீதி யொன்று உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதுவரை காணப்படும் ரூபா 371,133 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| ii xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.2, 4.2.4, 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3 | உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்று 3-12 மாதங்கள் மற்றும் 2-3 ஆண்டு களுக்கு இடைப்பட்டிருந்த காலப் பகுதிக்குள் அறவிடப்படாத மொத்தம் ரூபா 280,296 ஆன 2 கடன்மீதிகள் காணப்பட்டன. | இதுவரை 280,296 ஆன கன் மீதிகள் இரண்டு காணப்படுவதுடன் அவை தீர்வு செய்யப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| iii xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தீர்வு செய்யப்படாத வேலை இடை நிறுத்தப்பட்ட 5 உத்தியோ கத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 659,913 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகள் காணப்படுவதால் தீர்வுசெய்வதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| iv xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 | 2 வருடங்கள் அல்லது அதற்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 342,889 ஆன கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கடனை ப பதிவழித்தல் மற்றும் தவணை ரீதியாக அறவிடப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 109(1) | பாணந்துரை பிரதேச செயலகத்தில் 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்திற்குரிய அறவிடக்கூடிய தாக இருந்த ரூபா 97,252 ஆன நட்டத்தை பிரதேச செயலாளரின் பரிந்துரையின் பேரில் மாவட்ட செயலாளரால் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மூன்றாம் தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நீதிமன்ற தீர்மானமொன்று பெற்றுக் கொண்டுள்ளதால் பின்தொடர் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு உட்பட்டு நட்டத்தை பதிவழிப்புச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 109(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.5 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சபிரிகம செயற் திட்டத்தின் வீதி நிர்மாண நிர்மாணங்களுக்காக பிரதேச செயலகத்தினால் பணக் கொடுப்பனவின் போது வீதியின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்வதற்காக அழுத்த சக்தி பரிசோதனை (Cube test) மற்றும் வீதியின் தடிப்பு தொடர்பான பரிசோதனை அறிக்கை (Core test) ஆரம்ப அடிப்படையொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் பணக் கொடுப்பனவிற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைளில் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் மாற்றங்கள் மற்றும் வேறு குறைபாடுகள் காணப்பட்ட காரணத்தினால் 141 செயற்திட்டங்களுக்குரிய மொத்தம் ரூபா 82,087,610 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | மாவட்டத்தில் காணப்படும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலகங்கள் மூலம் தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் உள்ளதால் அவை கிடைக்கப் பெற்றதன் பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கும் தவறான அறிக்கைகள் மீது கொடுப்பனவு செய்தமையால் அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை கணக்கிட்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| அறிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள் | பி.செ.அளவு | செயற்திட்ட எண்ணிக்கை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| • மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஹொரண மற்றும் இரத்மலான ஆய்வுகூடங்களிலிருந்து வழங்கப்பட்ட சித்தியடையாத அறிக்கையை சித்தியடைந்த அறிக்கைகளாக மாற்றப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | 12 | 34 |
| • ஆய்வுகூடங்களிலிருந்து வழங்கப்படாத எனினும் ஆய்வுகூடங்களால் வழங்கப்பட்டதாக தயாரிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பேரில் கொடுப்பனவு செய்திருந்தமை | 01 | 05 |
| • பரிசோதனை அறிக்கைகளின் பெறுபேறு சித்திபெறவில்லை என குறிப்பிட்டிருக்கையில் அது தொடர்பில் கவனம் செலுத்தாமல் பணக் கொடுப்பனவு செய்திருந்தமை | 12 | 69 |
| • பரிசோதனை அறிக்கை சித்தயடையாத சந்தர்ப்பங்களில் பரிசோதனை அறிக்கை சித்தி பெறவில்லை என்பதை ஆய்வுகூடத்திற்கு தெரிவிக்காமல் அதே ஆய்வுகூடத்திலிருந்து இரண்டாவது தடவையாக பெற்றுக்கொண்ட அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | 6 | 18 |
| • பரிசோதனை அறிக்கை சித்தயடையாத சந்தர்ப்பங்களில் பரிசோதனை அறிக்கை சித்திபெறவில்லை என்பதை ஆய்வுகூடத்திற்கு தெரிவிக்காமல் வேறொரு ஆய்வுகூடத்திலிருந்து இரண்டாவது தடவையாக பெற்றுக்கொண்ட அறிக்கை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | 02 | 04 |
| • 07 நாட்கள் மற்றும் 28 நாட்களுக்குரிய பொழிப்பறிக்கை சித்திபெறாத போது முறையான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ள முடியாத மாதிரியை வழங்கி 39 நாட்களில் பெற்றுக்கொண்ட பரிசோதனை அறிக்கை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | 01 | 01 |
| • அறிக்கை சித்தியடையாத சந்தர்ப்பங்களில் பிரதேச செயலக குழுவொன்றின் தீர்மானத்தின் அடிப்படையில் தரமில்லாமல் நிர்மாணத்திற்குரிய நிறுத்தி வைத்தல் தொகையை அதிகரிப்பற்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | 05 | 07 |
| • ஆய்வுகூடங்களிலிருந்து பரிசோதனை அறிக்கை வழங்கப்படுவதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்நமை | 01 | 03 |
| மொத்தம் | | 141 |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 6 பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 552,583,335 ஆன மீதியொன்றாக இருந்தது. அதற்கு இடையே 5 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய இரண்டு ஆண்டுகளை மிகைத்த தீர்வு செய்யப்படாத ரூபா 209,226,429 கூட்டுத் தொகையான வைப்பு மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 45,848,596 தொகை 5 ஆண்டுகளை மிகைத்த மீதிகளாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) ஏற்பாடுகளின் பிரகாரம் காணப்படும் குறைபாடுகள் மற்றும் தவறுகள் சீர் செய்யப்பட்டு உரிய தரப்பினருக்கு வைப்புத் தொகை கொடுப்பனவு செய்யவோ அல்லது அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணப்படும் தொற்று நிலைமை மற்றும் கட்டுநிதி கிடைக்காமை போன்ற காரணங்களின் பேரில் தீர்வு செய்தல் தாமதமாகியிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571 (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலமான செயற்திட்டங்கள்

சபிரி கமக் சமூக அடிப்படையிலான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் 2,367 நிர்மாண செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.2.1 செயற்திட்டங்களை இனங்காணலும் செயற்படுத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபிரி கமக் சமூக அடிப்படையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக களுத்துறை மாவட்ட செயலகத்திற்குரிய 2,390 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,524,000,000 தொகையான நிதி ஏற்பாடு அதில் ரூபா 1,508,700,000 பெறுமதியான 2,367 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப் பட்டிருந்தன. அதன் ரூபா 15,300,000 பெறுமதியான 23 செயற்திட்டங்களை செயற்படுத்தாத காரணத்தினால் அப்பணத்தை களுத்துறை மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாவட்டத்தில் காணப்படும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலகங்கள் மூலம் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளல் தாமதமானதால் அவை கிடைத்ததன் பின்னர் பதில் அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கிடைக்கப்பெறும் அனைத்து நிதிஏற்பாடு களையும் மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 6 ஆந் திகதிய MFEPD/PLAN/RD2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்திட்டங்களை இனங்காணும் போது முன்னுரிமை வழங்க வேண்டிய 9 துறைகள் வழங்கப்பட்டிருந்த போதும் 14 பிரதேச செயலகங்கள் மூலம் செயற்படுத்தப்பட்ட 2,367 செயற்திட்டங்களில் 2,284 செயற்திட்டங்கள் அதாவது 96.5 சதவீதம் கிராமிய வீதிகள், வாரச் சந்தைகள், மதகுகள் சிறிய பாலங்கள் மற்றும் | - மேற்படி - | எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சகல துறைகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் செயற் திட்டங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிகாண்கள் போன்ற ஒரே துறைக்குரிய செயற் திட்டங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய 8 துறைகளுக்காக 83 செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செயற் திட்டங்களைத் தெரிவு செய்யும் போது சுற்றறிக்கையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி செயற்திட்டங்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக 14 பிரதேச செயலகங்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் பிரதேச செயலகங்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் 996 நிர்மாண வேலைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 1,371 நிர்மாணங்களுக்குரிய மதிப்பீடு தயாரித்தல், பட்டியல் தயாரித்து கொடுப்பனவிற்குச் சமர்ப்பித்தல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் களுத்துறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக பணக் கொடுப்பனவு செயற்பாடு மாத்திரம் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெறும் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி வேலைத்திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டுமென |
| (ஈ) | நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் போது மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக செயற்பட்ட போதும் உள்ளூராட்சி மன்றங்களால் செயற்படுத்தப்பட்ட செயற் | - மேற்படி - | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகளைப் |

| | | |
|---|---|---|
| திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் தயாரித்த மதிப்பீடு மற்றும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களைப் பரீட்சிப்பதற்கு பிரதேச செயலாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றை ஒழுங்குப டுத்துவதற்கு உள்ளக சுற்றறிக்கைள் அல்லது அறிவுறுத்தல் கோவையொன்றை விநியோகிப்பதற்கு மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்காமல் இருந்தாக அவதானிக்கப்பட்டது. | | பயன்படுத்தி வேலைத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டுமென |

### 3.2.2 அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் குறைபாடுகள்

---

11 பிரதேச செயலகங்களால் செயற்படுத்தப்பட்ட சபிரிகமக் செயற்திட்டங்களின் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) இனால் அங்கீகரிக்கப்பட்ட விலை அட்டவணையின் பிரகாரம் வீதி நிர்மாணத்தின் வடிவமைப்பு வேலை (form Work) இற்காக பயன்படுத்தும் ஒரு சதுர மீற்றருக்காக ரூபா 1,335 அல்லது ரூபா 943 ஆன விலைக்கு பதிலாக ரூபா 3,351 ஆன விகிதம் உள்ளடக்கப்பட்டு 162 வடிவமைப்பு வேலைகளுக்காக 07 பிரதேச செயலகங்களால் ரூபா 22,351,434 கூடுதலாக இட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| பிரதேச செயலகம் | செயற்படுத்தி செயற் திட்டங்களின் எண்ணிக்கை | கூடுதலாக மதிப்பீடு செய்து கொடுப்பனவு செய்த தொகை ரூபா |
|---|---|---|
| வலல்லாவிட்ட | 08 | 796,004 |
| களுத்துறை | 63 | 5,999,473 |
| பாணந்துரை | 35 | 6,683,019 |
| மதுராவெல | 21 | 831,593 |
| ஹொரண | 12 | 6,683,019 |
| புலத்சிங்கள | 18 | 746,236 |
| பாலிந்த நுவர | 05 | 612,090 |
| | 162 | 22,351,434 |

**(ஆ) பிரதேச செயலகம் - வலல்லாவிட்ட**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிக்கு கொங்கரீட் இடும் போது ஒரு கன மீற்றர் கொங்ரீட்டிற்காக போக்குவரத்து கட்டணத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதம் ரூபா 19,314 ஆக இருந்த போதும் மதிப்பீட்டினை தயாரிக்கும் போது அது போக்குவரத்து கட்டணமற்ற விலையாக குறிப்பிட்டு மேலதிக மீற்றர் ஒன்றாக ஒரு கன மீற்றருக்கு ரூபா 930 வீதம் போக்குவரத்து கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் மீது ரூபா 5,124,709 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) பிரதேச செயலகம் - களுத்துறை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபிரி கம செயற்திட்டத்திற்குரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு பிரிவின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஆகக்கூடியது ரூபா 2,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் களுத்துறை பிரதேச செயலகத்தின் இரண்டு பிரிவுகளின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ரூபா 4,000,000 தொகை செலவிடப்பட்டு 729 டீ பிரிவில் ஓரச் சுவ1ரொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும். |

**(ஈ) பிரதேச செயலகம் - தொடங்கொட**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட் விலை அட்டவணையின் பிரகாரம் நிர்மாண கைத்தொழில்களுக்கு பயன்படுத்தப்படும் 37.5 மி.மீ கருங்கல்லின் கன மீற்றருக்கான அங்கீகரிக்கப்பட்ட விலை ரூபா 2,400 இற்குப் பதிலாக ரூபா 3,134 உள்ளடக்கப்பட்டு 115 செயற்திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 1,180,823 தொகை கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக 20km ஒரே தூரத்திலிருந்து | - மேற்படி – | அசாதாரண மதிப்பீட்டின் பேரில் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்கள் போக்குவரத்து செய்வதாக குறிப்பிட்டு ஒரு கனமீற்றர் பொருட்களை 20 Km கொண்டு செல்வதற்கு ரூபா 620 வீதம் ஈடுபடுத்தி 115 செயற் திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 1,752,527 ஆன அசாதாரணமான போக்குவரத்து செலவினம் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | இனங்கண்டு அரசிற்கு அறவிடப்பட வேண்டிய மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(உ) பிரதேச செயலகம் - ஹொரண**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தெரிவு பரிசோதனையின் பிரகாரம் தாரிட்டு பூர்த்தி செய்யப்பட்ட 76 வீதிகளின் வீதியின் மேற்பரப்பில் முதலாவது சதுர மீற்றருக்கு 2 லீற்றர் என வரும் வகையில் சூடாக்கப்பட்ட தார் இட்டு பூர்த்தி செய்யும் போது விப் கல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தின் பிரகாரம் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 302 செலுத்த முடியும். எனினும் விப் கல்லுக்குப் பதிலாக மணல் இடுவதற்கு 2019 மற்றும் 2020 ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தின் பிரகாரம் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 329 மற்றும் ரூபா 324 விலை மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டு 76 செயற்திட்டங்களுக்காக மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 844,196 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தினுள் 108 வீதிகளுக்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் அதில் 78 வீதிகளில் 5 அங்குல உயரத்தில் 1:2:4 விகிதத்தில் கொங்கிரீட் இடுவதற்கு முன்னர் ABC (Aggregate Base Course) இட்டு வீதியின் மேற்பரப்பு அமைக்கப்பட்டிருந்தது ABC வழங்கி பரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட விலைகளின் பிரகாரம் ஒரு கன மீற்றருக்காக மொத்தம் ரூபா 3,510 விலை குறிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. வீதிக்காக இடப்படும் ABC அளவு வீதி மேற்தளத்தின் தன்மையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதும் கொங்கிரீட் இடப்பட்ட 78 வீதிகளுக்கும் 76 மி.மீ உயரத்தில் வீதியின் மேற்பரப்பிற்கு ABC இடுவதை அடிப்படையாக கொண்டு மொத்தம் ரூபா 3,456,347 ஆன அசாதாரணமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | அசாதாரண மதிப்பீட்டின் பேரில் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை இனங்கண்டு அரசிற்கு அறவிடப்பட வேண்டிய மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஊ) பிரதேச செயலகம் - புளத்சிங்கள**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தினுள் சபிரிகமக் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஏனைய கொங்கிரீட் வீதிகளின் உயரம் 0.125 மீற்றர் உயரமாக இருந் போதும் திவிலகட இலுக்மண்டிய வீதி மாத்திரம் 0.152 மீற்றர் உயரத்தில் கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 2,000,000 மதிப்பீடு | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் அதே வகையில் வீதியின் தடிப்பை கூட்டுவதற்கு ஏதுவான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. வீதியின் தடிப்பு 0.125 மீற்றர் முதல் 0.152 மீற்றர் வரை அதிகரித்தமை காரணமாக கொங்கிரீட்டிற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 296,470 ஆல் அதிகரித்திருந்தது. வீதிக்காக 1:2:4 விகிதத்தில் கொங்கிரீட் இடுவதற்கு 86.41 கன மீற்றருக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் கொடுப்பனவின் போது 90.7 கன மீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மதிப்பீட்டு அளவை விட 4 கன மீற்றர் கொங்கிரீட்டிற்காக ரூபா 82,787 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வீதியின் உயரம் தொடர்பாக பரிசோதனை அறிக்கை (core test) இன் பிரகாரம் உயரம் 0.150 மீற்றர் அளவிலான இடங்கள் காணப்பட்டமை மதிப்பிடப்பட்ட 0.152 மீற்றர் உயரம் இல்லாதிருக்கையில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,980,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | தெரிவு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட 10 கொங்கிரீட் வீதிகளின் தடிப்பு தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக Provisional Sum என ரூபா 16,000 வீதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் வீதியொன்றுக்காக பரிசோதனை அறிக்கைக்காக ரூபா 11,613 வீதம் பரிசோதனை நிறுவனத்திற்கு செலுத்தப் பட்டிருந்தது. பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக கூடுதலான | - மேற்படி - | அசாதாரண மதிப்பீட்டின் பேரில் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை இனங்கண்டு அரசிற்கு அறவிடப்பட வேண்டிய மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தொகை மதிப்பீடு செய்யப்பட்டு எஞ்சிய தொகையை மேலதிக முடிவுறுத்தல்களாக வேறு விடயங்களுக்கு உள்ளடக்கி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(எ) பிரதேச செயலகம் - பாலிந்தனுவர**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மேல் மாகாண பிரதி பிரதான செயலாளர் (பொறியியலாளர் சேவைகள்) இனால் அங்கீகரிக்கப்பட்ட விலை தொடர்பாக அட்டவணைப் படுத்தப்பட்ட விலை பதிவேட்டின் பிரகாரம் 2020 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் மதிப்பீடு தயாரிக்கும் போது 1:2:4 கொங்கிரீட் கன மீற்றருக்காக ரூபா 18,484 பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் அத்திகதிக்கு பின்னர் செயற்படுத்தப்பட்டிருந்த செயற் திட்டங்களுக்காக ஒரு கனமீற்றருக்காக ரூபா 19,314 விலையை அடிப்படையாக கொண்ட காரணத்தினால் ரூபா 612,498 ஆன மிகை மதிப்பீட்டின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பாலிந்தநுவர பிரதேச செயலக பிரதேசத்தில் ஹல்தொல வீதி இயந்திரத்தினூடாக வெட்டி அபிவிருத்தி செய்யும் போது பயன்படுத்திய JCB இயந்திரத்திற்காக 115.5 இயந்திர மணித்தியாலங் களுக்காக ரூபா 423,975 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்பட்ட கொடுப்பனவிற்கு அடிப்படையாக கொண்ட ஆவணங்களைப் பரீட்சித்த | - மேற்படி - | அரசின் வளங்களில் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக பரீட்சித்து குறித்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | போது இயந்திரங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்திய திகதிகள் குறிப்பிடப்படாமை மற்றும் பயன்படுத்திய இயந்திரம் இலங்கை தரைப்படைக்குச் சொந்தமான இயந்திர மொன்றென அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கொண்ட பரிசோதனையின் போது டெல்கிவத்த பிரதான வீதி குவாரி மண் இட்டு வடிகாண் முறைமையை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் அதற்கு முரணாக ரூபா 500,000 மதிப்பீடொன்றின் கீழ் வடிகாண் வெட்டப்பட்டு வீதியை மட்டப்படுத்தியதாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நோக்கத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | பிரதேச செயலக அதிகார பிரதேசத்திர் 147 வீதிகளுக்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் அதில் 94 வீதிகள் 5 அங்குல உயரத்தில் 1:2:4 விகிதத்தில் கொங்கிரீட் இடுவதற்கு முன்னர் ABC (Aggregate Base Course) இட்டு வீதியின் மேற்பரப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. வீதிக்காக பயன்படுத்தப்பட்ட ABC அளவு வீதியின் மேற்பரப்பின் தன்மையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் கொங்கிரீட் இட்ட 94 வீதிகளுக்காக ABC மற்றும் கொங்கிரீட் ஒரே அளவில் உள்ளடக்கப்பட்டு அசாதாரண மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் மீது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | அசாதாரண மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் மீது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகையை இனங்கண்டு அரசிற்கு அறவிட வேண்டுமெனவும் குறித்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் |

**(ஏ) பிரதேச செயலகம் - இங்கிரிய**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தெரிவு பரிசோதனையின் பிரகாரம் தாரிட்டு பூர்த்தி செய்யப்பட்ட 13 வீதிகளின் வீதியின் மேற்பரப்பில் 1 சதுர மீற்றருக்கு 2 லீற்றர் என வரும் வகையில் சூடாக்கப்பட்ட தார் இட்டு பூர்த்தி செய்யும் போது விப் கல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தின் பிரகாரம் அதற்காக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 302 செலுத்த முடியும். எனினும் விப் கல்லுக்குப் பதிலாக மணல் இடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தின் பிரகாரம் ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 329 விலை மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டு 13 செயற் திட்டங்களுக்காக மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 198,418 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

**(ஐ) பிரதேச செயலகம் - பண்டாரகம**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) வீதி நிர்மாண வேலைகளில் வடிவமைப்பு வேலைக்காக மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது பிழையான விகிதங்களை பயன்படுத்தியமையால் 13 செயற் திட்டங்களுக்காக மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 1,770,939 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

| | | |
|---|---|---|
| (ii) 2020 செப்தம்பர் 01 ஆந் திகதியின் பின்னர் செயற்படுத்தப் பட்டிருந்த 16 செயற்திட்டங் களுக்கு கொங்கிரீட்டிற்காக மதிப்பீடு தயாரிக்கும் போது கனமீற்றருக்காக பிழையான விகிதமொன்றை பயன்படுத்தியமையால் மிகை மதிப்பீட்டின் மீது ரூபா 278,082 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) கொங்கிரீட் வீதிகளின் தடிப்பு தொடர்பாக உறுதிப்படுத்து வதற்காக பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக Provisional Sum இன் கீழ் ரூபா 6,000 வீதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அட்டவணைப் படுத்தப்பட்ட விலை பதிவேட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விலை ரூபா 4,645 ஆக இருந்தமையால் 114 செயற்திட்டங்களுக்காக ரூபா 475,605 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**(ஒ) பிரதேச செயலகம் - பேருவள**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மதிப்பீடு தயாரிக்கும் போது உத்தியோகத்தர்கள் அவற்றை தயாரித்த திகதியை குறிப்பிடாமல் இருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரீட்சிப்பும் இடம் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 செப்தம்பர் 01 ஆந் திகதியின் பின்னர் செயற்படுத்தப்பட்டிருந்த 47 செயற்திட்டங்கள் 1:2:4 கொங்கிரீட் விடயத்தில் ஒரு | இது தொடர்பாக அவதானிப்புக்களை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவதானிப்புக்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| கனமீற்றருக்கு பிழையான விகிதம் பயன்படுத்தப் பட்டிருந்தமை காரணமாக மொத்தம் ரூபா 748,411 மிகை மதிப்பீட்டுடனான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | | முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (ii) மதிப்பிடப்பட்ட வேலை விடயத்திற்கு உரிய விகிதங்களை உள்ளடக்கும் போது அதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட பஅட்டவணப்படுத்தப்பட்ட விலை பதிவேடு மற்றம் அதன் குறியீட்டு இலக்கத்தை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது 80 செயற்திட்டங்களில் அகழ்வு நடவடிக்கைகளுக்காக கனமீற்றருக்கு ரூபா 1,735.75 மற்றம் 26 செயற்திட்டங்களில் சேரும் நீரை அகற்றுவதற்கு ஒரு நாளைக்கு ரூபா 4,440 வீதமான விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டமை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொடங்கொட பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டின் போது தீயிட்டுக் கொழுத்தியதால் ஏற்பட்ட ரூபா 1,465,525 ஆன நட்டம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கோ புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு 2020 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் படிவம் 2021 மே 4 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள் ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மத்துகம பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று 2015 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டதன் பின்னர் இடம் பெற்றுள்ள ரூபா 1,271,169 ஆன நட்டம் 2020 திசெம்பர் 31 வரையிலும் தீர்வு செய்யப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது புத்தகத்திலிருந்து நட்டங்கள் அகற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (இ) | கொவிட் தொற்று சமயத்தில் சமுர்த்தி நலனாலி குடும்பங்களுக்காக 2020 மே 12 ஆந் திகதிய MF/NB/CM/91/2020/124/05 ஆம் இலக்க நிதி பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சமுர்தி உதவித்தொகை மற்றும் ரூபா 5,000 இற்கு இடையே வித்தியாசத்தினை செலுத்த வேண்டும். எனினும் தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் களுத்துறை, பேருவள மற்றும் பாணந்துரை பிரதேச செயலகத்தனால் 25,390 ஆன நலனாலிகளுக்கு மே மாதத்தின் இரண்டு படிகளும் கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் மொத்தம் ரூபா 57,595,640 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | 2020/05/10 ஆந் திகதிய DSD/HO/DG ஆம் இலக்க சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (ஈ) | குடா பயாகல அம்பேகம இலிருந்து கடலுக்குள் நீர் வழிந்தோடும் காண் முறைமை அமைக்கும் செயற் திட்டத்திற்குிரய நிலையான பெயர் பலகையொன்று பொருத்துவதற்காக மதிப்பிடப்பட்டதன் பிரகாரம் ரூபா 40,000 ஒப்பந்தக்காரருக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பெயர் பலகையொன்று பொருத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது | பெயர் பலகைக்காக செலுத்தப்பட்டுள்ள தொகையை மீண்டும் அரசிற்கு செலுத்துமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக அறிக்கை இடப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

## 3.4 கணக்காய்வு விசாரணகளுக்கு பதில் வழங்காமை

.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட 13 கணக்காய்வு விசாரணைகளுக்காக 2021 மே 31 ஆந் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்டத்தில் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலகங்களிலிருந்து விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதத்தினால் அவை கிடைத்த பின் பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்காய்வு விசாரணைகளுக்காக உரிய நேரத்தில் பதிலளிக்க வேண்டும் |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | களுத்துறை மாவட்டத்திற்குரிய 13 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் அதிக ஆபத்துள்ள உள்ளமையால் இடம்பெயருமாறு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக ''வீட்டிற்காக வீடு'' எண்ணக்கருவின் படி பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள 879 வீடுகளை அமைப்பதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை கிடைக்கப்பெற்ற ரூபா 1,363,413,225 ஆன நிதி ஏற்பாடுகளில் 2020 திசெம்பர் 31 வரை நலனாலிகளுக்கு அதில் ரூபா 929,986,597 வழங்கப்பட்டிருந்தது. எனினும் இலக்கிடப்பட்ட வீடுகளில் 606 வீடுகள் மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நலனாலிகளைக் கொண்டு 273 வீடுகளை பூர்த்தி செய்வதற்கு உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர். | மாவட்டத்தில் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலகங்களிலிருந்து விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதத்தினால் அவை கிடைத்த பின் பதில் அளிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது | ஆபத்துள்ள உள்ள ஆட்களை பாதுகாப்பான இடங்களில் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| நலனாலிகள் வகை | | நலனாலி குடும். எண்ணி. | பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணி. | பூர்த்தி செய்யப் படாத வீடுகளின் எண்ணி. |
|---|---|---|---|---|
| i | அரசினால் வழங்கப்பட்ட காணியில் நிர்மாணிப்பதற்கு ரூபா 1,200,000 வழங்கல் | 355 | 305 | 50 |
| ii | நலனாலி கொள்வனவு செய்த காணிக்கு ரூபா 400,000 உம் காணியில் வீட்டைக் கட்டுவதற்கு ரூபா 1,200,000 | 267 | 128 | 139 |
| iii | வீடு சேதமடைந்த நலனாலியால் தனக்கு உரித்தான வேறொரு இடத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,200,000 வழங்கல். | 135 | 63 | 72 |
| iv | வீட்டுடன் காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,600,000 வழங்கல் | 122 | 110 | 12 |
| | மொத்தம் | **879** | **606** | **273** |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் தொடர்புபடுத்தப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள 2019 மே 14 ஆந் திகதிய SEC/2029/02 ஆம் இலக்க முத்திரை கட்டணங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்கின்ற ALF1, ALF2, AFL3 மற்றும் AFL4 மதுபான அனுமதிப்பத்திரம் மற்றும் போத்தல் கள்ளு அனுமதிப்பத்திரங்களுக்காக 2006 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய நிலுவை | மாவட்டத்தில் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலகங்களிலிருந்து விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதத்தினால் அவை கிடைத்த பின் பதில் அளிப்பதாக | நிலுவை முத்திரைக் கட்டணங்களை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முத்திரை வரி காணப்பட்டால் அவற்றை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். எனினும் 10 பிரதேச செயலகங்களால் மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் பேரில் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 21,534,500 ஆன நிலுவை முத்திரைக் கட்டணமொன்று அனுமதிப்பத்திர உடைமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2020 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டிருந்தது | |
| (இ) மீளாய்வாண்டின் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக தகவல் கோரலின் போது மத்துகம, பேருவள மற்றும் மதுராவல பிரதேச செயலகங்கள் 2021 மே 10 வரை அத்தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. தகவல்களைச் சமர்ப்பித்த 11 பிரதேச செயலகங்களுக்கு இடையே 4 பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறும் 70 பேருக்கு நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதிய கடிதக் கோவையொன்று இல்லாமல் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 12,252,253 தொகை அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதிய கடிதக் கோவையொன்று இல்லாமல் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யும் போது மோசடிகள் அல்லது முறைகேடுகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய முறையான நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு முகாமையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு பிரதேச செயலகங்களுக்கு அறிவூட்டுவதற்கும் கோவைகள் இல்லாத ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தவறான கொடுப்பனவுகளை தவிர்க்கும் கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று காரணமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ரூபா 5,000 ஆன படிகள் வழங்கும் போது 4 பிரதேச செயலகங்களில் தெரிவுசெய்யப்பட்ட 4 கிராம சேவை பிரிவுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது விண்ணப்பங்களை வழங்குதல், பொறுப்பேற்றல் மற்றும் ஆவணங்களைப் பேணிச்செல்லல் என்பன முறையாக திட்டமிட்டு செயற்படுத்தாத சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதும் பணம் கொடுப்பனவு செய்யாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, பணக்கொடுப்பனவின் போது நலனாலிகளின் பெயர் பதிவேடு பிரதேச செயலாளர்களால் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | நலன்களை வழங்குவதற்குரிய விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள், ஆலோசணைகள் மற்றும் வழிகாட்டிகள் பிரகாரம் முறையான திட்டமொன்றின் கீழ் நலன்கள் செலுத்தப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 நோக்கங்களின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகள் இனங்காணப் பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது 14 பிரதேச செயலகங்களால் அபிவிருத்தி செயற்திட்டங்களைத் தெரிவுசெய்யும் போது நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக முறையான கவனமொன்று செலுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது. | பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப் படுகின்ற செயற் திட்டங்களில் நிலைபேறான நோக்கங்களுக்குரிய அநேகமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 2 மாதிரியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான மாவட்ட செயலகத்திற்காக தயாரிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிக்கையிடுகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த பதவியணியினருக்குமாக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |